**STC 221/2023**
**Date: 29.01.2026**
**PW : 1**

**பெயர் - திரு ராஜேஷ்**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 6ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியுமா என்றால் ஓரளவு படிக்க தெரியும். புகார் மனு, நிரூபண வாக்குமூலம் அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது புகார் மனுவில் ஆட்டோகன்சல்டிங் தொழில் செய்து வருகிறேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், எனது நிறுவனத்தின் பெயர் அன்னை மாதா ஆட்டோ கன்சல்டிங். ஆட்டோ கன்சல்டிங் மூலம் ஒரிஜினல் ஆர்சிபுக் வைத்து கடன் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். எனது ஆட்டோ கன்சல்டிங் மூலம் இருசக்கர, நான்குசக்கர வாகனங்களுக்கு கடன் கொடுப்பேன் என்றால் சரிதான். வாகன கடன்களுக்கு வட்டி உண்டு என்றால் சரிதான்.

எனது நிறுவனம் மூலம் வாகனங்களுக்கு கடன் கொடுப்பது தவிர தனிநபர்களுக்கு கடன் கொடுப்பீர்களா என்றால் இல்லை. வாகன கடன்களுக்கு வட்டி எத்தனை சதவீதம் என்றால் 1பைசா வட்டி ஆகும். எனது புகார்மனுவில் விவசாயம் செய்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், எத்தனை ஏக்கரில் விவசாயம் செய்துவருகிறேன் என்றால் 3 ஏக்கரில் விவசாயம் செய்து வருகிறேன். விவசாய பயிர்கள் என்ன பயிர் போட்டுள்ளேன் என்றால் தென்னை போட்டுள்ளேன். எனது ஆட்டோ கன்சல்டிங் நிறுவனம் அரசிடம் பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான்.

எதிரியை எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது நண்பர். எத்தனை வருடம் பழக்கம் என்றால் 20 வருடத்திற்கு மேல் பழக்கம். எதிரி என்ன படித்துள்ளார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் மனைவி பெயர் தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் அம்மா பெயர் தெரியாது என்றால் சரிதான். எதிரி குடியிருக்கும் பக்கத்தில் எனக்கு நண்பர்கள் உண்டு என்றால் சரிதான். எதிரி என்னிடம் எப்போது பணம் கேட்டார் என்றால் 03.01.2023. எதிரி என்னிடம் 03.01.2023ல் தான் முதன்முதலாக பணம் கேட்டார் என்றால் சரிதான். 03.01.2023ற்கு முன்பு எதிரி என்னிடம் எந்த கடன் வாங்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய வீட்டில் எத்தனை நபர்கள் உள்ளார் என்றால் என்னுடன் சேர்த்து 5 நபர்கள். 03.01.2023ம் தேதி கடன் கேட்கும்போது எதிரி மட்டும்தான் எனது வீட்டிற்கு வந்தார்.

எதிரி எனது வீட்டிற்கு வரும்போது எனது வீட்டில் யார் இருந்தார் என்றால் நான் வெளியே நின்று கொண்டிருந்தேன். எதிரி வந்தது எனது வீட்டில் உள்ளவர்களுக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி வரும்போது நான் வீட்டிற்கு வெளியே நின்றுகொண்டிருந்த விபரத்தை எனது புகார் மனுவிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் வீட்டிற்கு வெளியே நின்றுகொண்டிருந்த விபரத்தை எனது புகார் மனுவிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றும், இவ்வழக்கிற்காக ஞாபகமில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி எந்த கிழமையில் எனது வீட்டிற்கு வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எத்தனை மணிக்கு எதிரி எனது வீட்டிற்கு வந்தார் என்றால் காலையில் வந்தார், மணி ஞாபகமில்லை. பணத்தை எதிரியிடம் நான் எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் 06.01.2023ம் தேதியன்று எனது வீட்டருகே வைத்து கொடுத்தேன். 06.01.2023ம் தேதி எதிரிக்கு நான் எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் ரூபாய்.10,00,000/–கொடுத்தேன். கடன் கொடுத்த விபரம் வேறு யாருக்கு தெரியாது என்றால் சரிதான். பணம் ரூபாய்.10,00,000/–த்தை எப்படி எடுத்து சென்றேன் என்றால் எனது பேக்கில் கொண்டுசென்றேன். எதிரிக்கு கடன் கொடுத்த இடத்திற்கும் எனது வீட்டிற்கும் எத்தனை அடி துாரம் இருக்கும் என்றால் சுமார் 20 அடி இருக்கும்.

கடன் கொடுத்த இடம் திறந்தவெளி என்றால் சரிதான். எப்போது கடன் கொடுத்த இடத்தில் ஆள்நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். நான் கொடுத்த பணத்தை எதிரி எண்ணி பார்த்தாரா என்றால் எண்ணி பார்த்தார். கடனாக கொடுத்த பணம் 500 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. பணம் ரூபாய்.10,00,000/–த்தை எதிரி எண்ணிபார்க்க 10 நிமிடம் ஆகும் என்றால் 2 நிமிடம் ஆகும். 03.01.2023ம் தேதி எதிரி கடன் கேட்ட தொகையை அன்றைய தேதி கொடுக்காததற்கு வேறு காரணம் உள்ளது என்றால் பணத்தை சேகரிக்க எனக்கு காலஅவகாசம் தேவைப்பட்டது. 03.01.2023ம் தேதி என்னிடம் பணம் கிடையாது என்றால் பணம் இருந்தது, எவ்வளவு என எனக்கு தெரியாது.

எதிரிக்கு கடன் கொடுக்கும்போது எதிரியிடமிருந்து என்ன ஆவணங்களை வாங்கிகொண்டு பணம் கொடுத்தேன் என்றால் காசோலையை மட்டும் கொடுத்தார். பொதுவாக டூவிலர் லோன் கடனிற்காக என்ன ஆவணங்களை வாங்குவேன் என்றால் ஆர்.சிபுக், ஆதார்கார்டு மற்றும் ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்குவேன். கடனாக கொடுத்த பணம் ரூபாய்.10,00,000/– அன்றைய தேதியில் வங்கியிலிருந்து எடுத்து

கொடுக்கப்பட்டது என்றால் எனது கைவசம் இருந்துதான் கொடுத்தேன். அந்த பணம் தொழிலிருந்து வந்தது என்று சொன்னால் தொழில் மற்றும் விவசாயத்திலிருந்து வந்தது. எனது ஆட்டோ கன்சல்டிங் தொழிலில் வரவு செலவு கணக்கு புத்தகம் உள்ளது என்றால் சரிதான். எதிரியிடம் பணம் ரூபாய்.10,00,000/-த்தை கொடுக்கும்போது பிராமிஸரிநோட்டோ, ரசீதோ வாங்கவில்லை என்று சொன்னால் எதிரி நண்பர் என்பதால் நான் வாங்கவில்லை. இவ்வழக்கு காசோலை செக்யூரிட்டியாக கொடுக்கப்பட்டது என்று சொன்னால் காசோலையை வங்கியில் செலுத்தி கடனை பெற்றுக்கொள்ளுமாறு சொன்னால்.

எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்புவதற்கு முன்பாக எதிரியிடம் போனில் விபரம் சொன்னேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. எதிரியை நேரில் சென்று நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள விபரங்கள் அனைத்தும் வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல, நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. இவ்வழக்கு காசோலை சட்டபூர்வ கடனிற்காக கொடுக்கப்பட்டது என தனிப்பட்ட சாட்சியங்கள் உள்ளதா என்றால் சாட்சியங்கள் இல்லை. ம.சா.ஆ.1 காசோலையானது வெற்றுக்காசோலையாகதான் எதிரி என்னிடம் கொடுத்தார் என்றால் இல்லை, எதிரி காசோலையில் பூர்த்தி செய்து தான் என்னிடம் கொடுத்தார்.

காசோலையில் உள்ள விபரங்கள் யார் பூர்த்தி செய்தார் என்று எனக்கு தெரியாது என்றால் எதிரிதான் என் முன்னிலையில் பூர்த்தி செய்தார். ம.சா.ஆ.1 காசோலையில் ராஜேஷ் என்ற பெயர் என்னால் எழுதப்பட்டது என்றுசொன்னால் எதிரியால் எழுதப்பட்டது. ம.சா.ஆ.1 காசோலை வங்கியில் திருப்பப்படும் என்று தெரிந்துதான் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனது ஆட்டோகன்சல்டிங் தொழில் மூலம் வருடத்திற்கு எவ்வளவு வருமானம் என்றால் பத்து லட்சத்திற்கு அதிகமாகவே வரும். வருமான வரி செலுத்தி வருகிறீர்களா என்றால் வருகிறேன். வருமான வரி செலுத்தியதற்கான ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் 2023 ற்கான வருமான வரி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் 2023 ற்கான வருமான வரி அறிக்கையில் எதிரிக்கு கடன் கொடுத்துள்ள விபரம் துலங்குமா என்றால் துலங்காது.

வருமான வரி கணக்கில் எதிரிக்கு கடன் கொடுத்த விபரங்களை சொல்லாமல் இருப்பதற்கான காரணங்கள் உள்ளதா என்றால் எதிரிக்கு கைமாற்றாகதான் கடன் கொடுத்தேன். எதிரியை தவிர வேறு யாருக்காவது

கைமாற்றாக ரூபாய்.10,00,000/− கடன் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. வருமான வரி செலுத்தும்போது வரவு, செலவு விபரங்களை தாக்கல் செய்யவேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது வருமான வரி கணக்கில் எதிரிக்கு கொடுத்த ரூ.10,00,000/− கடன் விபரத்தை குறிப்பிடாததால் கடனானது சட்டபூர்வமான கடன் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக ரூ.20,000/−ற்குமேல் கடன் கொடுக்கும்போது டிடியாகவோ, வங்கியிலிருந்து ஆர்டிஜிஎஸ் மூலமாகவோ அனுப்பவேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

எதிரிக்கு கொடுத்த கடனானது முறையான ஆவணங்களை வாங்காமல் கொடுத்ததால் அந்த கடனானது சட்டபூர்வமான கடன் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக ரூ.10,00,000/− கடன் கொடுக்கும்போது பிராமிஸரி நோட்டோ, ரசீது, அசல் ஆவணங்களை பெற்றுக்கொண்டுதான் கடன் கொடுப்பது வழக்கம் என்றால் சரியல்ல, எதிரி நண்பர் என்பதால் கடன் கொடுத்தேன். எதிரிக்கு நான் உண்மையில் கடன் கொடுக்காததால்தான் மேற்படி பிராமிஸரி நோட்டோ, ரசீது, அசல் ஆவணங்களை வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார் மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் எதிரி ஏற்கனவே பூர்த்தி செய்த காசோலையை கொடுத்து என்னிடம் கடன் பெற்றுசென்றார் என்ற விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது சாட்சியத்தில் எதிரி என் முன்னிலையில் காசோலையை பூர்த்தி செய்தார் என்பது சரி என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. ம.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையெழுத்து யாருடைய என்று எனக்கு தெரியுமா என்றால் எதிரியுடையதுதான்.

எதிரியின் கையெழுத்தை இதற்கு முன்பு நான் பார்த்துள்ளேன் என்றால் நான் பார்த்ததில்லை. ம.சா.ஆ.1 காசோலையை அதில் குறிப்பிட்டுள்ள தேதியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான், எதிரி 06.01.2023 லிருந்து 09.02.2023 தேதிக்குள் தாக்கல் செய்யுமாறு சொன்னார். 06.01.2023 லிருந்து 09.02.2023 தேதிக்குள் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யுமாறு எதிரி என்னிடம் சொன்னார் விபரத்தை புகாரிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி எந்த நாட்டில் வேலை செய்கிறார் என்றால் வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார், எந்த நாடு என்று எனக்கு தெரியாது. எதிரிக்கு மாதம் ரூ.1,50,000 முதல் ரூ.2,00,000 இருக்கும் என்றால் இருக்கலாம். எனது நண்பர் ஊருக்கு வந்தார் என்னை சந்திப்பார் என்றால் சந்திப்பார்.

எதிரிக்கு போதுமான அளவு மாத சம்பளம் வாங்குவதால் என்னிடம் எதிரி கடன் ரூ.10,00,000 வாங்க அவசியமில்லை என்றால் சரியல்ல. எதிரி பணங்குடி ஆர்சி சர்ச்சில் மதிப்புமிக்க உறுப்பினர் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரி பணங்குடி ஜோசப் ஆலயத்தில் உறுப்பினராக இருக்கிறார் என்றும், அந்த சபையில் இரண்டு குழுக்களாக செயல்பட்டு வருகின்றனர் என்றும், அதில் உள்ள ஒரு குழுவினரிடம் எதிரியிடமிருந்து காசோலையை திருடி என்னிடம் கொடுத்து அதனை நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு அறிவிப்பை அனுப்பியபிறகு எதிரி என்னை வந்து பார்த்தாரா என்றால் இல்லை. எதிரி எனது நண்பர் என்பதால் நான் சென்று எதிரியை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை.

நான் வள்ளியூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சிசி எண்.235/2011 என்ற வழக்கை சுமதி என்பவருக்கு எதிராக நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வள்ளியூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சிசி எண்.203/2014 என்ற வழக்கை சேக்ஸ்பியர் என்பவருக்கு எதிராக நான் தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி இருவழக்கில் மூன்றாம் நபரிடமிருந்து பெற்ற காசோலையை வைத்து வழக்கு தாக்கல் செய்து பின்னிட்டு பணத்தை பெற்றுக்கொண்டு, வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்வது வழக்கம் என்று சொன்னால் சரியல்ல. எதிரி அனுப்பிய பதில் நோட்டிஸை நான் படித்து பார்த்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் உள்ள விபரங்களை நான் வழக்கறிஞர் மூலம் தெரிந்துகொண்டேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் காசோலையில் உள்ள கையெழுத்து எதிரி உடையது அல்ல என்றும், அதனை நான் தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்று சொல்லியுள்ளார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. காசோலையில் உள்ள கையெழுத்து எதிரியுடைதுதான் என்று நிரூபணம் செய்வதற்கு கைரேகை நிரூபணர் மூலம் ஆய்வு செய்ய எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் அது நீதிமன்றம் முடிவுசெய்யுமாறு கூறினார். எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றும், நான் பணம் கொடுக்கவில்லை என்றும், உண்மையில் கடன் கொடுத்திருந்தால் என்னுடைய குடும்ப உறுப்பினர்கள் கண்கண்ட சாட்சியாக இருந்திருப்பார்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. எதிரி பணம் படைத்தவர் என்பதற்காக அவரிடமிருந்து பணம் பறிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் மூன்றாம் நபர் காசோலையை கொண்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.01.29 17:35:15 +0530